# 6

# இலங்கைப் பெண் கவிதைகளில் ஆண்களும் அதிகாரமும்

- எம்.எம். ஜெயசீலன்

## I

பெண்ணியக் கருத்துநிலைகளும் அவை பற்றிய உரையாடல்களும் ஆணாதிக்கத்துக்கு எதிரான உரையாடல்களாகவே ஆரம்பமாகின்றன. ஆண் அதிகாரச் சமூகமும் அதன் ஆதிக்கக் கருத்துருவங்களும் பெண்களின் சுயாதீனமான இருத்தலுக்குப் பெருஞ் சவாலாக விளங்குகின்றன. அதனால் பெண்களின் இருப்புப் பற்றிய எல்லாவிதமான உரையாடல்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆண் அதிகாரத்துடன் தொடர்புபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. பெண்களின் சுயாதீனமான இருத்தலை நிலைநிறுத்த முயற்சிக்கும் பெண்ணியம், நிலவுகின்ற மரபார்ந்த ஆணாதிக்கச் சமூக அமைப்பையும் அச்சமூக அமைப்பைக் கட்டிக்காக்கும் கருத்துருவங்களையும் நிராகரித்து, அவற்றை மீள்நிர்மாணம் செய்ய முயற்சிப்பதோடு அம்மீள்நிர்மாணத்திற்குத் தடையாக அமையும் அனைத்துத் தளைகளையும் தகர்த்தெறிவதற்கான கலகத்தையும் முன்னிறுத்துகின்றது. அதனாலேயே பெண்ணிய நிலைப்பட்ட அணிதிரட்டல், விழிப்புணர்வு முதலிய போராட்டச் செயற்பாடுகள் யாவும் ஆண் அதிகாரத்தை எதிர்ப்பதையும் பால் அசமத்துவத்தை நிர்மூலமாக்குவதையும் மையச்சரடாகக் கொண்டுள்ளன.

ஆண் அதிகாரச் சமூகமும் அதன் ஆதிக்கக் கருத்துருவங்களும் பெண்களின் சுயாதீனமான இருத்தலுக்குப் பெருஞ் சவாலாக விளங்குகின்றன.

உலகளாவிய இலக்கிய வெளியில் பெண்ணிய நிலைப்பட்ட எழுத்துக்கள், ஆண் அதிகார உலகையும் அவ்வுலகினைக் கட்டிக்காக்கும் கருத்துருவங்களையும் கட்டுடைக்கும் ஆயுதமாகவும், ஆண்களால் உருவாக்கப்பட்டுள்ள மரபுசார் பெண் படிமங்களைத் துடைத்தகற்றி, பெண்களின் இருப்பை நிலைநிறுத்தும் ஊடகமாகவும் வெளிப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இலங்கைப் பெண் கவிஞர்கள் ஆண் அதிகாரச் சமூகத்தையும் அதனைப் பேணும் ஆதிக்கக் கருத்துருவங்களையும் எவ்வாறு அணுகியுள்ளனர் என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## II

இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பில் பெண் எழுத்துக்கள் என்ற தனித்த அடையாளம் 1980களிலேயே முனைப்புப்பெறத் தொடங்கியது. அதற்கு முற்பட்டக் காலங்களில் ஆங்காங்கே உதிரியாக சில பெண் எழுத்துக்கள் வெளிவந்துள்ள போதிலும் பெண்ணிலைவாத சிந்தனைளும் அவற்றின் அதிர்வுகளும் 1980களில் இருந்தே பரவலாக இடம்பெறத் தொடங்கின. அக்கால இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமையும், உலகளாவிய ரீதியில் எழுச்சிபெற்ற பெண்ணிலைவாத சிந்தனைகளின் வளர்ச்சியும் இந்த மாற்றத்தினை நிகழ்வித்தன.

1980களில் உக்கிரம்பெற்ற இன வன்முறையும் போராட்டமும் மரபார்ந்த பெண்களின் வாழ்வினை முற்றிலும் சிதைத்தன.

1980களில் உக்கிரம்பெற்ற இன வன்முறையும் போராட்டமும் மரபார்ந்த பெண்களின் வாழ்வினை முற்றிலும் சிதைத்தன. சிறிய வீடு, கிடுகு வேலி என்பனவற்றைத் தாண்டி, குடும்பத்தைத் துறந்து, மண்ணின் விடுதலைக்காக புறப்பட்டுப்போன பெண்கள், போர்முனைகளில் ஆயுததாரிகள், பகல்-இரவு மறந்து தன்னந்தனியாக வனாந்தரங்களில் உலாவித்திரிபவர்கள், இரவு நேரக் காவலாளிகள், தற்கொலைப் படையாளிகள் எனப் பல தளங்களில் செயற்படத் தொடங்கினர். இவ் இனவிடுதலை வேட்கை, மரபார்ந்த பெண் படிமத்தை உடைத்தெறிந்தது. வீட்டின் பின்கட்டுப் புழங்குவெளியில் உப்புப் புளி பிரச்சினைகளைப் பேசியவர்கள் அவ் இருட்டுப் பகுதியைவிட்டு வெளியேறி, ஊர்வலம், பதாகை ஏந்துதல், விடுதலை, சுதந்திரம், அரசியல், போராட்டம் எனப் புதிய வெளிகளில் இயங்கத் தொடங்கியதுடன் புதியதோர் உலகம் படைக்கவும் முனைந்தனர் (சொல்லாத சேதிகள், 1986: 20, 21). அத்துடன் மறுபுறத்தே மேலைத்தேய மரபில் எழுச்சிபெற்ற பெண்விடுதலைசார் கருத்துநிலைநின்று இயக்கம் கொள்கின்ற படித்த தமிழ்ப் பெண்கள் பலர் உருவாக்கம் பெற்றனர். பெண்விடுதலைக்கான அமைப்புக்கள் தோற்றம்பெற்றதோடு சமூக இயங்குமுறையில் பெண்களின் இரண்டாம் பட்சநிலை, பால் அசமத்துநிலை நுட்பமாக அம்பலப்படுத்தப்பட்டன. பெண்விடுதலை குறித்த விழிப்புணர்வு பரவலடைந்தது. வெவ்வேறு மட்டங்களில் உள்ள பெண்களும் தற்துணிவுடன் தம்மைப் பற்றிப் பதிவு செய்யத் தொடங்கினர். அதனால் சமூகத்தின் ஆழ்கிடங்கில் அமுக்கப்பட்டிருந்த ‘சொல்லாத சேதிகள்’ பல அம்பலம் ஏறின. மேலும், யுத்தம் நிர்ப்பந்தித்த புலம்பெயர்வும், புலம்பெயர்ந்த பெண்களின் வாழ்க்கை முறையும், அவர்களின் செயற்பாடுகளும் பெண் எழுத்துக்களில் புதிய பல பாய்ச்சல்களை ஏற்படுத்தின.

இதுவரை வெளிவந்துள்ள இலங்கைத் தமிழ்ப் பெண் கவிதைகளை மொத்தமாக நோக்கும்போது இனவிடுதலை, விடுதலைப் போராட்டம், தமிழ்த்தேசியம், அரச வன்முறை, போராட்ட இயக்கங்களின் வன்முறை, யுத்தம் நிர்ப்பந்தித்த வாழ்வு, யுத்தத்திற்கு ஆதரவான குரல், யுத்தத்திற்கு எதிரான குரல், பால் அசமத்துவம், ஆணாதிக்க ஒடுக்குமுறை, கலாசார வன்முறை, மனித உரிமை மீறல்கள், வர்க்க முரண், சுரண்டல், சாதிய

அடக்குமுறை, அன்பு, காதல், இயற்கை, மனிதநேயம், புலம்பெயர் வாழ்வு, சர்வதேச அரசியல் நிலைமைகள் போன்ற பல அம்சங்கள் பரவலாகப் பேசப்பட்டுள்ளன. இவ் எல்லாப் பாடுபொருள்களின் அடிநாதமாகவும் பெண்களின் இருப்புப் பற்றிய பிரச்சினையே உள்ளோடி யிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அவ் வெவ்வேறுபட்ட பாடுபொருள் தளங்களிலும் பெண்ணின் இருப்பில் அச்சுறுத்தலை ஏற்படுத்திவருவதாக ஆண் அதிகாரச் சமூகமும் அதன் ஆதிக்கக் கருத்துருவங்களும் விளங்குகின்றன. அதனால் அவற்றுக்கு எதிரான தீவிர எதிர்வினைகள் அக்கவிதைகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவ் எதிர்வினைகளைப் பொதுமை நோக்கில் பின்வருமாறு வரையறுத்துக்கொள்ளலாம்:

01. தந்தையாதிக்கச் சமூகக் கட்டமைப்பின் மையமான இணைமுரண் புனைவை தலைகீழாகக் கவிழ்த்தலும் தகர்த்தலும்.
02. ஆண், ஆண்மை, பெண், பெண்மை என்ற சொற்களுக்குள் கட்டப்பட்டிருக்கின்ற போலியான கற்பிதங்களை உடைத்தெறிதல்.
03. ஆண், ஆண்மை எனும் ஆதித்திமிரினை கேலிக்கும் நகைப்புக்கும் உள்ளாக்குதல்.
04. ஆணின் அதிகாரத்தை வளர்த்தெடுக்கும் தளமாக இயங்குகின்ற குடும்ப அமைப்பைக் கேள்விக்குட்படுத்தல்.
05. ஆணாதிக்கச் சமூகவெளியில் பெண் இருப்பின் சூனியத்தை அம்பலப்படுத்தி, ஆணின் அத்துமீறல்களை எதிர்த்தல்.
06. மரபுசார் பெண் படிமங்களை நிராகரித்து, அவற்றைப் பேணி வரும் கருத்துருவங்களைக் கேள்விக்குட்படுத்தி அவற்றின் அரசியலை அம்பலப்படுத்தல்.
07. கலாசார வன்முறைகளுக்கான தீவிர எதிர்வினையை முன்வைத்தல்.
08. உடலரசியலை முன்னிறுத்துதல்.
09. ஆணாதிக்கச் சமூக அமைப்பைத் தகர்த்தெறிந்து தமக்கான உலகினைக் கட்டமைக்க முயற்சித்தல்.

## III

தந்தையாதிக்கச் சமூகம் கட்டமைக்கும் எல்லா மதிப்பீடுகளுக்கும் மையமாக அச்சமூக அமைப்பில் செயற்படும் இணைமுரண் (Binary Opposition) விளங்குவதாகக் கூறப்படுகின்றது. அதாவது, நன்மை X தீமை, பெருமை X சிறுமை, தூய்மை X துடக்கு, சுத்தம் X அசுத்தம், புனிதம் X அல்புனிதம், இருப்பு X இன்மை, ஆண் X பெண் எனத் தந்தைவழிச் சமூகம் புனைந்துள்ள இணைமுரண்கள் முன்னதை உயர்ந்ததாகவும் விரும்பத்தக்கதாகவும் பின்னதைத் தாழ்ந்ததாகவும் வெறுக்கத்தக்கதாகவும் கட்டமைத்துள்ளன. அதனால் பால்சமத்துவத்தை

தந்தையாதிக்கச் சமூகம் கட்டமைக்கும் எல்லா மதிப்பீடுகளுக்கும் மையமாக அச்சமூக அமைப்பில் செயற்படும் இணைமுரண் (Binary Opposition) விளங்குவதாகக் கூறப்படுகின்றது.

நிலைநாட்ட முனைபவர்கள், 'பெண்ணை அமுக்கி வைப்பதற்கும், மௌனத்தில் உறைய வைப்பதற்கும் ஆண் மேலாண்மைச் சமூகம் புனைந்துள்ள இவ் இணைமுரண் புனைவை தலைகீழாகப் புரட்டிப்போட வேண்டும் என்கின்றனர்' (பஞ்சாங்கம், *2006, 17*). அத்தலைகீழ் கவிழ்ப்பானது இரண்டாம் நிலையில் நிறுத்தப்பட்டுள்ள பெண்ணை அவ்விடத்திலிருந்து நிலைமாற்றி அவளை மேலானவளாகவும் விரும்பத்தக்கவளாகவும் மாற்றியமைக்கும் எனக் கருதுகின்றனர். அதேவேளை இக்கவிழ்ப்பானது ஆண் - பெண் சமத்துவத்திற்கு இட்டுச் செல்லாது என்ற முரண்பட்ட கருத்துநிலை கொண்ட பெண்ணிய லாளர்களும் உள்ளனர். அவர்கள் இவ் இணைமுரணைத் தகர்த்தெறிவதன் மூலமே ஆண், பெண் சமத்துவம் சாத்தியம் என்கின்றனர் (மேலது: *21-29*). ஏனெனில் தந்தையாதிக்க இணைமுரண்களைத் தலைகீழாக கவிழ்ப்பதன் மூலம் மீண்டும் அசமத்துவமான சமூக அமைப்பே பேணப்படும். மேல்-கீழ், உயர்வு-தாழ்வு, புனிதம்-அல்புனிதம் போன்ற நிலைகளில் மாற்றம் ஏற்படலாம். பின்னது முன்னதாகமாறி மேலானதாக, உயர்வானதாக மாற்றப்படலாம். அப்போது பின்னதாக மாறுவது தாழ்ந்ததாகவும் வெறுக்கத்தக்கதாகவும் அமைந்திருக்கும். ஆகவே, இந்த அமைப்பைத் தலைகீழாக கவிழ்ப்பதற்குப் பதில் அதனையே தகர்த்து எறிந்தால்தான் ஆண்-பெண் சமத்துவம் சாத்தியப்படலாம் என்கின்றனர்.

இலங்கைத் தமிழ் இலக்கிய வெளியில் பல பெண் கவிஞர்கள் தந்தையாதிக்கச் சமூக இணைமுரண் புனைவை தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளதோடு சிலர் அவ் இணைமுரண் களைச் சிதைத்துக் கலவையாக்கி யுள்ளனர்.

இலங்கைத் தமிழ் இலக்கிய வெளியில் பல பெண் கவிஞர்கள் தந்தையாதிக்கச் சமூக இணைமுரண் புனைவை தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளதோடு சிலர் அவ் இணைமுரண்களைச் சிதைத்துக் கலவையாக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக,

> *"பலவீனர்களல்ல*
> *பலத்தின் அடிப்படையே நாம்*
> *நாமே இம் மண்ணிண் மாந்தர்கள்"* (சுல்பிகா, *1995: 24*)

என்ற சுல்பிகாவின் பிரகடனம் வலிமை, ஆதிக்கம் என்பனவற்றை ஆணுக்கும் மென்மை, அடக்கம் என்பனவற்றைப் பெண்ணுக்கும் உரியவைகளாகக் கற்பிக்கப்பட்டுவந்ததை தலைகீழாகக் கவிழ்த்து வலிமை, ஆதிக்கம் என்பனவற்றின் இருப்பிடமாகப் பெண்ணை முன்னிறுத்துகின்றது.

> *"நீ அறியாத என்னை*
> *உன் உடலறியாத எனது காமத்தை*
> *உணர்த்தப் பரபரக்கிறது உடல்*
> *என் சதை கொன்று*
> *என் உடல் கொன்று*
> *என் வேட்கை கொன்று*
> *வாழ்வு நீள்கின்றது"* (தான்யா, *2014: 37*)

என்ற தான்யாவின் உணர்ச்சித் தெறிப்பு, செயலூக்கமான பாலியல் தன்மை கொண்டவனாகக் கூறப்பட்டுவந்த ஆண், பெண்ணின் உடலறியும் தன்மையற்றவன் என்று கூறி, அவனது உடலை இரண்டாம் நிலைக்குத் தள்ளி பெண்ணின் உடலை முதன்மைப்படுத்துகின்றது. இவ்வாறு தந்தையாதிக்கச் சமூகத்தின் இணைமுரணைத் தலைகீழாகப் புரட்டுகிற கவிதைகள் அதிகமான பெண்களிடம் வெளிப்பட்டுள்ள அதேவேளை அவ் இணைமுரணைத் தகர்க்கும் செயற்பாட்டினையும் தம் எழுத்துக்களில் சிலர் மேற்கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக,

*'உனது அதிகாரங்களையும்*
*எனது அண்டிவாழ்தலையும்*
*கீழிறக்கிவைத்துவிடுவது*
*சாத்தியப்படுமெனில் ஒன்று சேர்வோம்'* (ஃபஹீமா ஜஹான், *2007: 37*)

என்ற ஃபஹீமா ஜஹானின் வரிகள், தந்தையாதிக்கச் சமூகம் கற்பித்துள்ள ஆண் அதிகாரத்திற்குரியவன், பெண் அண்டிவாழ்பவள் என்ற மாறாவுரு நிலைப்படிமத்தைச் சிதைத்து, அப்பிரிகோட்டுநிலையை அழித்தால்தான் ஆணோடு பெண் இணைந்து வாழலாம் என அழைப்பு விடுகின்றது. இவ்வாறு தந்தையாதிக்கச் சமூகம் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தப் புனைந்துள்ள இணைமுரண்களைப் பல பெண்கவிஞர்கள் ஆட்டிப் பிடிங்கியுள்ளதோடு அதன் இன்னொரு நீட்சியாக ஆண், ஆண்மை என்ற சொற்களுக்குப் பின்னால் கட்டப்பட்டிருந்த பிம்பங்களையும் கேள்விக்குட்படுத்தியுள்ளனர்.

## IV

ஆண் அதிகாரத்திற்கு எதிராகக் கலகத்தை முன்னிறுத்தும் பெண்கள், இயற்கையான உடற்கூற்றியல் அம்சங்களுடன் பௌதீகப் பண்பாட்டு அம்சங்களையும் சேர்த்து ஆண், ஆண்மை, பெண், பெண்மை என்ற பதங்களுக்குள் கட்டப்பட்டிருக்கின்ற புனைவுகளின் போலித்தன்மையைத் தகர்த்தெறிய முனைந்துள்ளனர். தமிழ்ச் சமூக வரலாற்றில் பண்டைய காலத்திலேயே ஆணுக்கானதும் பெண்ணுக்கானதுமான வெவ்வேறு உலகங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளதோடு அவ்வவ் உலகங்களுக்கான ஒழுக்க விழுமியங்கள் கொண்ட அற உடல்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அவ் அற உடல்களுள் ஆணுக்குப் பெருமை, வலிமை, புகழ், அறிவு, கடமை, உரிமை, ஆள்வினை, செயலூக்கமான பாலியல், அதிகாரம் ஆகியவை வேறாகவும் பெண்ணுக்கு உடல் அழகு, மென்மை, பணிவு, அடங்கிய பாலியல், கற்பு ஒழுக்கம், சேவைச் செயல், மடமை, நாணம் வேறாகவும் கற்பிக்கப்பட்டுள்ளதோடு ஆண்களின் சான்றாண்மை, ஈகை, வீரம், செல்வமுடைமை, தவம், தானம், ஆளுமை முதலிய உயர் அறங்களுக்கு ஈடாகப் பெண்களுக்கு கற்பு – பதிவிரதா தர்மம் என்ற ஒன்றே கற்பிக்கப்பட்டுள்ளது (ராஜ்கௌதமன், *1997: 156-171.)*

ஆண் அதிகாரத்திற்கு எதிராகக் கலகத்தை முன்னிறுத்தும் பெண்கள், இயற்கையான உடற்கூற்றியல் அம்சங்களுடன் பௌதீகப் பண்பாட்டு அம்சங்களையும் சேர்த்து ஆண், ஆண்மை, பெண், பெண்மை என்ற பதங்களுக்குள் கட்டப் பட்டிருக்கின்ற புனைவுகளின் போலித் தன்மையைத் தகர்த்தெறிய முனைந் துள்ளனர்.

அத்தோடு வாழ்வின் விதிமுறைகளாகக் கற்பிக்கப்பட்டு இருவேறு துருவங்களில் நிறுத்தப்பட்டுள்ள சமத்துவமற்ற ஆண், பெண் உலக இயக்கங்களைப் பலர் சிதைத்துள்ளனர்.

இப்புனைவுகளைப் பல பெண்கவிஞர்கள் முற்றிலும் கேள்விக்குட் படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக,

*'ஆதிமுதல் போற்றிவரும்*
*அந்தக் கிரீடங்களின் மீது*
*அவமதிப்பை விட்டெறிகின்றேன்'* (மேற்கோள்: நுஃமான், 2010: 24)

எனப் பெண்ணின் அணிகலன்களாகப் பண்டுதொட்டு கற்பிக்கப்பட்டவற்றின் மீது தனது பகிரங்க எதிர்ப்பைத் தெரிவிக்கும் ஃபஹீமா ஜஹான், அவ் அணிகலன்களில் சூட்டப்பட்டிருந்த புனிதப் போர்வையை அகற்றி எறிந்துள்ளார். அத்தோடு வாழ்வின் விதிமுறைகளாகக் கற்பிக்கப்பட்டு இருவேறு துருவங்களில் நிறுத்தப்பட்டுள்ள சமத்துவமற்ற ஆண், பெண் உலக இயக்கங்களைப் பலர் சிதைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக,

*'இன்னும்*
*இந்த ஒரே உலகத்திலேயேதான்*
*இருக்கின்றன*
*எனக்கும் அவனுக்குமான*
*வெவ்வேறு உலகங்கள்'* (மங்கை, (தொ.ஆ) 2007: 24)

என இவ் ஒரே உலகத்திலேயே இயங்கும் ஆணுக்கும் பெண்ணுக்குமான வெவ்வேறான உலகங்களை இனங்கண்ட பெண்கள், அவ் உலகங்களுள் அதிகாரத்தின் இருப்பிடமாக ஆண் உலகையும் அவ் அதிகாரப் பரப்பிற்குள் அண்டி இயங்குவதாகப் பெண் உலகையும் கட்டமைத்துள்ள தந்தையாதிக்கக் கருத்தோட்டத்தை முற்றிலும் நிராகரிக்கின்றனர். எடுத்துக்காட்டாக,

*சாமர்த்தியங்களுடன் வருவான்*
*நேர்மையுடன் வருவாள்*
*தந்திரங்களை வழங்குவான்*
*நம்பிக்கைகளை வழங்குவாள்*
*நிறங்களை மாற்றிக்கொண்டிருப்பான்*
*ஒளியினை அணிந்துகொண்டிருப்பாள்*
*தொடுவான்*
*உணர்வாள்*
*அவனுடையவைகள் சுயநலங்கள் சார்ந்தவை*
*அவளுடையவை தியாகங்கள் சார்ந்தவை* (அனார், 2009: 37)

என்று அதிகாரத்தின் உறைவிடமாகக் கூறப்பட்ட ஆண் உலகு, நேர்மை, நம்பிக்கை, தியாகம் என்பவற்றுக்கு மாறாக சாமர்த்தியம், தந்திரம், சந்தர்ப்பவாதம் கொண்ட சுயநலங்களால் இயக்கம் கொள்கின்றது என ஆண்களால் உருவாக்கப்பட்டுள்ள ஒழுக்க, விழுமியங்களைக் கொண்டே ஆண் உலகை நகைக்கிறார், அனார். அத்தோடு ஆதியி லிருந்தே ஆண் சுமந்துவரும் உலகு பெண்ணின் இருத்தலில் எப்போதுமே அச்சத்தையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்துவதாகக் கூறும் பெண்கள்

அவ் இருவேறு உலக இயக்கங்களில் பெண்ணின் விடுதலை சாத்திய மில்லை என்பதை வெளிப்படுத்தி வருகின்றனர். எடுத்துக்காட்டாக,

*நானாக அவனும் அவனாக நானும்*
*சாத்தியமில்லை*
*எனது சந்தோசங்கள் அவனது சந்தேகங்கள்*
*எனது ஆசைகள் அவன் கற்பனை செய்யாதவை*
*அவனது ஆசைகள் என்னை அடிமை கொள்பவை* (றஞ்சனி, 2005: 36)

என அவ்வுலக இயக்கங்களின் உண்மைத் தன்மையை, அசமத்துவத்தை வெளிப்படுத்தும் பெண்கள், தந்தையாதிக்கச் சமூகம் கட்டமைத்துள்ள இருவேறு உலகினை மொத்தமாய் நிராகரிக்கின்றனர். எடுத்துக்காட்டாக, ஆண்களும், ஆண்களால் உருவாக்கப்பட்ட கடவுளர்களும் திட்டமிட்டுப் படைத்த இருவேறு உலக நியதிகளின் அசமத்துவத்தினை,

*நான் அட்டக் கறுப்பி*
*அவன் ஆயிரம் பொன்*
*நான் பொட்டை நாய்*
*அவன் ஆம்பிளைச் சிங்கம்*
*நான் வேசை*
*அவன் சேத்துல மிதிச்சு ஆத்தில துடைக்கலாம்*
*நான் மலடி*
*அவன் சாண்பிள்ளை எண்டாலும் ஆண்பிள்ளை*
*நான் ஊரோடி*
*அவன் சமூகத் தொண்டன்* (ஆழியாள், 2000 :48 )

என வெளிச்சமிட்டுக் காட்டும் ஆழியாள்,

*ஆதலால் பரமபிதாவே!*
*நீ வெண்தாடியோ சடாமுடியோ*
*அர்த்த நாரீஸ்வரரோ அருவமோ உருவமோ*
*ஆராய் வேண்டிலும் இருந்து விட்டுப்போம்*
*ஆனால் ஈரேழு உலகங்கள்*
*அண்டம் ஆகாசம் என்று அறளை பத்தாமல்*
*அடுத்த தடவை தன்னும்*
*உருப்படியாய் படையும்*
*ஒரே உலகத்தை* (மேலது: 50)

எனச் சமத்துவமான ஓர் உலகைப் படைக்குமாறு கட்டளைப் பிறப்பிக் கின்றார். அத்துடன் இந்த ஆண், பெண் இணைந்த ஓர் உலக உருவாக்கம் என்ற கருத்திலிருந்து விலகி, பெண்களை உள்ளடக்காத சட்டம், மொழி முதலிய ஆண் அதிகார உற்பத்திகள் யாவற்றிலிருந்தும் விட்டு விடுதலையாகித் தமக்கான உலகினைத் தாமே படைக்கவும் பெண்கள் பலர் முன்வந்துள்ளனர். ஆண்களால் படைக்கப்பட்ட

இந்த ஆண், பெண் இணைந்த ஓர் உலக உருவாக்கம் என்ற கருத்திலிருந்து விலகி, பெண்களை உள்ளடக்காத சட்டம், மொழி முதலிய ஆண் அதிகார உற்பத்திகள் யாவற்றிலிருந்தும் விட்டு விடுதலையாகித் தமக்கான உலகினைத் தாமே படைக்கவும் பெண்கள் பலர் முன்வந்துள்ளனர்.

உலகத்தில் ஆண்களின் வார்ப்பாக வடிக்கப்பட்டுள்ள பெண்களில் பெண்ணின் சுயத்தினை அறியமுடியவில்லை என்பதைப் பிரதீபா,

*நீ*
*படிக்கச் சொன்ன புத்தகம்*
*பார்க்கத் தந்த நாடகம்*
*எதிலும்*
*என்னைக் காணவில்லை*
*அவர்கள்*
*நீ படைத்த பெண்கள்*
*உண்மையில் நான் வேறு* (பிரதீபா, காலம், 2005- அக்டோபர்: 61)

எனப் பதிவுசெய்கின்றார். அதனால் பெண்கள் தம் சுயத்தோடு வாழக் கூடிய புதிய உலகினைப் படைக்க முனைகின்றனர்.

ஆண் - ஆண்மை என அதிகாரம் செலுத்தும் ஆணை, அவனது ஆண்மையைக் கேலிக்கும், நகைப்புக்கும் உள்ளாக்கு வதன் மூலம் ஆதியிலிருந்து தொடரும் அத்திமிர் மீதான தமது எதிர்ப்பினைப் பெண்கள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

## V

ஆண் - ஆண்மை என அதிகாரம் செலுத்தும் ஆணை, அவனது ஆண்மையைக் கேலிக்கும், நகைப்புக்கும் உள்ளாக்கு வதன் மூலம் ஆதியிலிருந்து தொடரும் அத்திமிர் மீதான தமது எதிர்ப்பினைப் பெண்கள் வெளிப்படுத்தி வருகின்றனர். எடுத்துக்காட்டாக,

*தன் மகனுக்கும்*
*ஆண்மையின் இலக்கணத்தை,*
*அறிவிப்பதாய்...*
*தினம் தினம் தாரத்துடன் சண்டையிட்டான்*
*அவளை*
*எட்டிப் பிடித்து*
*கன்னம் வீங்க கைவிரல் பதித்து*
*முஷ்டியால் குத்தி*
*முட்டி வீழ்த்தி*
*கூந்தல் பற்றி*
*சுவத்தில் சாத்தி*
*ஓங்கி அறைந்து ஒரு உதையும் போட்டான்*
*ஒவ்வொரு ஸ்டெப்பாய்*
*ஒயிலாய்ப் பழக்கினான் மகனுக்கும்!*

(மங்கை, (தொ.ஆ) 2007: 206,207)

என அறிவு, நிறைவு என்றெல்லாம் கூறப்பட்டு ஆண்மை என்ற போர்வையில் கட்டப்பட்டிருந்த மேன்மை எனும் இலக்கணம் மனைவியை துன்புறுத்துவதில் தான் முழுமை பெறுவதாக நகைக்கிறார், முகைசிரா முகைடீன். அத்துடன் தந்தையாதிக்கச் சமூகம் ஆணின் சுயத்தை எவ்வாறு கட்டமைத்துள்ளது என்பதைப் பின்வருமாறு அம்பலப் படுத்தியுள்ளார் கல்யாணி.

*நான்*
*உயர்ந்தவன் உன்னதமானவன்*
*தனித்துவமானவன்*
*நான் ஆண்*
*ஆண் என்பதால்*
*ஆற்றல் உள்ளவன்*
*அனைத்தும் அறிபவன்*
*குற்றம் செய்ய முடியாதவன்*
*குற்றம் இருந்தாலும்*
*மன்னிக்கப்பட வேண்டியவன்*
*ஏனெனில்*
*நான் ஆண் குறியை உடையவன்...'* (மங்கை, (தொ.ஆ) 2007: 71)

இந்நசிந்துபோன சிந்தனையின் வாரிசுகள் தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும், தமது வேட்கைகளைத் தணித்துக் கொள்ளவும் பெண் உடலை உணர்ச்சிகளற்ற பாலியல் பண்டமாகக் கருதி அவ்வுடல் மீதான அத்துமீறல்களை நிகழ்த்துகின்றனர். அவ் அத்துமீறல்களைக் கணவன், அப்பா, மாமா, நண்பர், ஊரவர், அரச படையினர், விடுதலைப் போராளிகள், அமைதிப் படையினர், மார்க்சியர், புலம்பெயர்ந்தவர்கள் என யாவரும் எவ்வித பேதமுமின்றி கச்சிதமாய் செய்துமுடிக்கின்றனர் என்பதைப் பதிவு செய்துள்ள கவிஞர்கள், அவர்களுக்கு எதிராகத் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக, இலங்கையின் அரசியல் சூழலினால் அரச இராணுவம், இந்திய இராணுவம் என யாவராலும் சோதனையிடல் என்ற செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. அச்சோதனையிடலும் பெண் உடல் மீதான அத்துமீறலையே முதன்மைப்படுத்தின என்பதைப் பானுபாரதி பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

> இந்நசிந்துபோன சிந்தனையின் வாரிசுகள் தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும், தமது வேட்கைகளைத் தணித்துக் கொள்ளவும் பெண் உடலை உணர்ச்சிகளற்ற பாலியல் பண்டமாகக் கருதி அவ்வுடல் மீதான அத்துமீறல்களை நிகழ்த்து கின்றனர்.

*ஒரு கவிதையையோ*
*காகிதத்தையோ*
*அல்லதொரு சிறு குறிப்பையோ*
*பெண்களின் மர்மப்பிரதேசங்களென*
*சுட்டப்படும் இடங்களில்கூட*
*மறைத்து வைப்பதென்பது*
*தற்கொலைக்குச் சமனான செயல்*
*ஏனெனில்*
*எல்லாத் தரப்பு சோதனைகளும்*
*முதலில் கைவிட்டுத் தேடுவது*
*இந்த இடங்களில் தான் இருக்கிறது* (பானுபாரதி, 2009: 32)

இந்நிலையால் ஆதியிலிருந்து தொடரும் ஆணின் அதிகாரச் செருக்குக்கு அடிப்படையாக அமைவதாகக் கருதப்படுகின்ற ஆண்குறி என்ற திமிரும் ஆண்மை எனும் ஆணவமும் அறுத்தெறியப்படும்வரை

பால்சமத்துவம் சாத்தியமில்லை என்பதைப் பலரும் வெளிப்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக,

*'வோட்கா நிரப்பப்பட்ட*
*உனது கண்ணாடிக் குவளையில்*
*எலுமிச்சை சீவல்களாய்*
*எனது கனவுகளோடு வாழ்வும்*
*கரைந்து போனதேன் என்ற*
*எனதொரு கேள்விக்கு*
*உன்னிடம் விடையில்லை*
*உன்னைப் படைத்த*
*உன்னப்பனின் ஆண்மையிடமும்*
*விடையிருக்கப் போவதில்லை*
*அம்மிக்கல்லில் அடித்து நொறுக்கப்படும்*
*சிதறுதேங்காய்போல்*
*உனதாண்மை நொறுக்கப்படும்போது*
*வோட்காவிலும் பியரிலும்*
*கரைந்துபோன கணங்களிலிருந்து*
*எனக்கான பதில் கண்டடையக்கூடும்'* (பானுபாரதி, 2009: 18)

என்று ஆண்கள் சூடியுள்ள ஆண்மையை அம்மிக்கல்லில் அடித்து நொறுக்கப்படும் சிதறு தேங்காய்போல நொறுக்கப்படும்போதே பெண்ணின் வாழ்வும் இருப்பும் முழுமை பெறும் என்கிறார் பானுபாரதி.

அதனால் ஆணின் அதிகாரத்தை வளர்த்தெடுக்கும் தலைமை யிடமாகக் குடும்ப அமைப்பைக் கருதி அதனைத் தகர்க்கும் கொள்கை யாக்கங்களை உருவாக்கிச் செயற்படுத்தி வருகின்றனர்.

## VI

ஆணின் அதிகாரச் செயன்முறையைத் தக்கவைக்கவும் அவ் அதிகாரத் தைப் பேணிகாக்கும் கருத்துருவங்களின் நிலைப்பேற்றுக்கும் குடும்பம் என்ற தந்தையாதிக்கக் கண்டுபிடிப்பே அடிப்படையாக அமைகின்றதென்பது பெண்ணியலாளர்களின் பொதுவான கருத்தாகும். அதனால் ஆணின் அதிகாரத்தை வளர்த்தெடுக்கும் தலைமையிடமாகக் குடும்ப அமைப்பைக் கருதி அதனைத் தகர்க்கும் கொள்கையாக்கங்களை உருவாக்கிச் செயற்படுத்திவருகின்றனர். இலங்கைப் பெண்கவிதைகளிலும் குடும்ப அமைப்பையும் அதற்குள் இயங்கும் ஆண் அதிகாரத்தையும் கேள்விக் குட்படுத்தும் தன்மையையும் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, பெண்களின் இயங்குவெளியாகவும், பாதுகாப்பு அரணாகவும் ஆணாதிக்கம் கட்டமைத்துள்ள குடும்பத்தைத் துறந்து செல்லும் பெண்ணின் குரல் பின்வருமாறு விரிவடைகின்றது,

*தந்தையரே!*
*நீங்கள் தரும் உயர்ந்த வஸ்திரத்தை*
*ஏற்கப் போவதில்லை*
*விருந்துண்டு உம்மோடு*

*கீதவாத்தியத்தில் மூழ்கிக் களிக்கவும்*
*போவதில்லை*
*வீடு திரும்புதலும் எனக்கில்லை*
*................................*
*தந்தையரே! எனக்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம்.*
(ஆழியாள், *2013: 16*)

## VII

தந்தையாதிக்கப் பிடியில் இருந்து விலகி தனித்துச் செயற்பட எத்தனிக்கும் பெண்கள் தந்தையாகிக்கச் சமூகம் பெண்ணுக்கென்று எல்லைப்படுத்தியுள்ள வரையறைகளைத் தகர்த்து அவற்றைக் கேள்விக்குட்படுத்துகின்றனர். அவ்வகையில் இலங்கைப் பெண்கவிஞர்கள் பலரும் ஆணாதிக்கச் சமூகம் கட்டமைத்துள்ள மரபுசார் பெண் படிமத்தைக் கேள்விக்குட்படுத்திவருவதுடன் அப்படிமத்துள் இயங்கும் ஆணாதிக்க அடக்குமுறைகளை அம்பலப்படுதிவருகின்றனர். எடுத்துக் காட்டாக, ஆணாதிக்கக் கருத்துருவங்கள் பெண் உடலை கற்பிதம் செய்துள்ள வற்றைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார் அனார்:

*உள்ளக் குமுறல்*
*உயிர்த்துடிப்பு*
*இருபாலார்க்கும் ஒரே விதமானது*
*எனினும்*
*பெண்ணுடையது என்பதனாலேயே*
*எந்த மரியாதையும் இருப்பதில்லை* (அனார், *2007: 27*)

அதிகாரப் பீடத்திலிருந்த ஆண், பெண்ணின் படிமத்தை இவ்வாறு இரண்டாம் நிலைக்குரியதாகக் கட்டமைத்து, அவ்வுடலுக்கான அந்தஸ்தைப் பறித்துள்ளமையை இங்கு பதிவுசெய்துள்ளார், கவிஞர். பெண்ணின் உணர்வுகளையும் எதிர்ப்பார்ப்புக்களையும் கருத்தில் கொள்ளாது அவர்களைக் குழந்தை உற்பத்தி செய்யும் இயந்திரமாகவும் ஆண்களின் பாலியல் இச்சைகளைத் தீர்க்கும் பாலியல் பிண்டமாகவும் தந்தையாதிக்கச் சமூகம் மதிப்பிட்டிருப்பதால் (தான்யா, *2014: 55*) பெண்கள் தமது சின்னச் சின்னக் கனவுகளோடுகூட வாழ்தல் சாத்தியமற்றுப் போனதோடு (ஔவை, *2014:31*) உணர்ச்சிகளற்ற ஜடமுமாக்கப்பட்டனர் (பெண்ணியா, *2006: 13*). அதனால் ஆணாதிக்கச் சமூகம் கட்டமைத்துள்ள மரபுசார் பெண்படிமத்தை முற்றிலும் நிராகரிக்கும் பெண்கள், அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளை எல்லாம் தாண்டிச் சுதந்திரமாக வாழத் துடிக்கின்றனர்.

அதிகாரப் பீடத்திலிருந்த ஆண், பெண்ணின் படிமத்தை இவ்வாறு இரண்டாம் நிலைக்குரிய தாகக் கட்டமைத்து, அவ்வுடலுக்கான அந்தஸ்தைப் பறித்துள்ள மையை இங்கு பதிவுசெய்துள்ளார், கவிஞர்.

## VIII

பெருகிவரும் பெண்களின் விழிப்பால் தமது இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என உணரும் ஆணாதிக்கம், பெண்ணின் சுயத்தினை மழுங்கடிப்பதற்காக தான் உற்பத்தி செய்து வைத்துள்ள கலாசாரம் என்ற சாதனத்தைக் காட்டிப் பெண்களை ஒரு கட்டுக்குள் வைக்க எத்தனிக்கின்றது. இதனை நன்குணர்ந்த பெண்கள் கலாசாரக் காவலாளர் களான ஆணாதிக்கவாதிகள் மீது தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். எடுத்துக்காட்டாக,

*என் வெறுப்புக்களை மிகைப்படுத்தும்*
*மனித மனம் தின்னும்*
*மேன் மக்களே*
*எனை வாழவிடுங்கள்*
*உங்கள்*
*உண்மைகளை விழுங்கும்*
*உணர்வுகளைச் சிதைக்கும்*
*சம்பிரதாயக் கயிற்றால் எனைத்*
*திரித்து வதை செய்ய வேண்டாம்* (பெண்ணியா, *2006: 14,15*)

எனச் சம்பிரதாயக் கயிற்றினால் வதை செய்யும் மேன்மக்களிடம் தன் சுயத்துடன் தன்னை வாழவிடுமாறு கேட்கின்றனர்.

இம்மரபுசார் பெண்படிம சிதைப்பில் பெண்களின் புழங்குவெளியாக வரையறுக்கப்பட்டிருந்த வீட்டை அதுவும் வீட்டின் பின்கட்டுப்பகுதியை விட்டு பெண்களின் இயங்குவெளி உலகம் நோக்கி விரிந்தமை மிக முக்கிய அம்சமாகச் சுட்டிக்காட்டலாம். எடுத்துக்காட்டாக, பெண்கள் பிரபஞ்சவெளி எங்கும் எல்லைகளற்றுச் சுற்றித்திரிவதற்குத் தடையாக ஆணாதிக்கம் பெண்களின் 'காலிற் பிணைத்த இரும்புக் குண்டுகள் அம்மியும் பானையும் தாலியும் வேலியும் நிலத்திலும் நிலத்திற்கு கீழே பாதாள இருட்டிலும் அவர்களை அழுத்துவதால்' (சொல்லாத சேதிகள், *1986: 03*) அவற்றைத் தகர்த்தெறிந்து மேலெழ முனைகின்றனர்.

> இம்மரபுசார் பெண்படிம சிதைப்பில் பெண்களின் புழங்கு வெளியாக வரையறுக்கப் பட்டிருந்த வீட்டை அதுவும் வீட்டின் பின்கட்டுப் பகுதியை விட்டு பெண்களின் இயங்குவெளி உலகம் நோக்கி விரிந்தமை மிக முக்கிய அம்சமாகச் சுட்டிக்காட்டலாம்.

*வேளைக்கு முன் எழுந்து*
*விரைந்து வெளியில் வா*
*சாலை ஓரம் நடந்து செல்ல*
*சோலை தன்னில் களித்து இருக்க*
*தேனீர்கடையில் தேனீர் அருந்த*
*அனைத்தும் அனைத்தும் நாம் வேண்டுவதை நாம் செய்ய*
*விரைந்து வெளியில் வா* (சுல்பிகா, *1995: 22*)

என வீட்டின் இருட்டு அறையில் வெளியே வருமாறு அழைப்பு விடுக்கின்றனர்.

தந்தையாதிக்கச் சமூகம் உருவாக்கியுள்ள ஆதிக்கக் கருத்துரு வாக்கங்கள் வெவ்வேறு தளங்களிலும் பெண்களுக்கு எல்லைகளை

வரையறுக்கின்றன. அவ்வரையறைகள் எப்பொழுதும் பெண்ணின் சுயாதீனமான இருப்புக்குத் தடையாகவே அமைகின்றன. அவ்வரையறைகளை மீறுவோர் ஆணாதிக்கம் கற்பிதம் செய்து நிலைப்படுத்தியுள்ள மேன்மை, பெருமை என்ற நிலைக்குத் தகுதியுடையவர் அல்லர். சமூக அங்கீகாரம், சமூக மதிப்பு, ஏற்புடைமை என்பன அத்தகையோருக்கு மறுக்கப்படுகின்றன. அதனால் பெண் கவிஞர்கள் எல்லைகளுக்குள் ஒடுங்கிய வாழ்வின் துயரத்தை அம்பலப்படுத்தி, அவ் எல்லைகளில் இருந்து விடுபட்ட வாழ்வினை விரும்புகின்றனர். இயற்கையைப் போல எல்லையற்று விரிய விரும்புகின்றனர். எடுத்துக்காட்டாக,

*'இயற்கையே!*
*உன்னோடு*
*எப்போதும் கைகுலுக்கிக் கொள்ளவே*
*விரும்புகின்றேன்*
*ஆறுகள்*
*நதிகள்*
*எல்லையின்றி இருப்பதைப் போல்*
*எப்போதும்*
*எல்லையில்லாது'* (மறையாத மறுபாதி, *1993: 66*)

என இயற்கையையும் பெண்ணையும் ஒன்றிணைத்து இயற்கையை ஒத்த எல்லைகளற்ற வாழ்வினைப் பெண்ணுக்கானதாய் கட்டமைக்கின்றனர்.

சிறுவயதிலேயே பெண்ணுக்கு அவளின் உடல் பற்றிய பிரக்ஞை திணிக்கப்பட்டு, அவளின் சுயம் அழிக்கப்பட்டு, வாழ்வு வரையறுக்கப் படுகின்றது.

ஆண் அதிகாரச் சமூகம் பெண்ணை ஒரு கட்டுக்குள் வைத்து ஒடுக்குவதற்கு கையாண்டவற்றுள் அவர்கள் உருவாக்கிய கற்புக்கோட்பாட்டுக்கு மிகுந்த வலிமை உண்டு. கற்பானது ஒரு பெண்ணுக்குத் தூய்மை, மேன்மை, தெய்வாம்சம் போன்றவற்றைத் தரும் என்று ஆணாதிக்கம் கட்டமைத்த புனைவுகள் பெண்களின் இருத்தலில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றன. சிறுவயதிலேயே பெண்ணுக்கு அவளின் உடல் பற்றிய பிரக்ஞை திணிக்கப்பட்டு, அவளின் சுயம் அழிக்கப்பட்டு, வாழ்வு வரையறுக்கப்படுகின்றது. அவற்றை அ.சங்கரி 'இன்று நான் பெரிய பெண்' என்ற கவிதையில் அப்பட்டமாகப் பதிவு செய்துள்ளார். அதாவது, பூவைப்போலவும் காற்றைப்போலவும் நீரைப்போலவும் குதித்துத் திரிந்து சுற்றக்கூடியதாக பூப்படைவதற்கு முந்திய பருவம் இருப்பதாகவும் அப்பருவத்தே காலை உதைத்து வீரிட்டு அழவும் கலகல என்று கைத்தட்டிச் சிரிக்கவும் கோபம் வந்தால் கொப்பியைக் கிழிக்கவும் முடியும் என்றும் மரத்தில் ஏறவும் மாங்காய் பிடுங்கவும் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடன் கிட்டியடிக்கவும் ஒளித்துப் பிடிக்கவும் யாரும் ஒன்றும் பேசமாட்டார்கள் என்றும் பூப்பெய்திய பின் இவையாவும் தலைகீழாக மாற்றமடைந்து பெண்ணுடலே ஒரு கட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றது என்றும் பதிவுசெய்துள்ளார் (சொல்லாத சேதிகள், *1986: 02*). இவ்வாறு பெண்ணின் சுயத்தை அழித்த ஆணாதிக்கம், அவள் மீது கற்பு எனும் ஒழுக்கத்தைத் திணித்து

இவ்வாறு பெண்ணின் சுயத்தை அழித்த ஆணாதிக்கம், அவள் மீது கற்பு எனும் ஒழுக்கத்தைத் திணித்து தமது இருத்தலை ஸ்திரப்படுத்திக் கொண்டது.

தமது இருத்தலை ஸ்திரப்படுத்திக்கொண்டது. அதனால் அக்கற்புக் கோட்பாட்டை முற்றிலும் நிராகரிக்கும் பெண்கள் அதனைச் சகஜமாகக் கடந்து செல்வதோடு, அக்கோட்பாட்டின் தூய்மையை இன்றுவரை காத்துவரும் ஆணாதிக்கக் கருத்துருவங்களையும் கேள்விக்குட்படுத்தி வருகின்றனர். எடுத்துக்காட்டாக, கற்புக்காய் கண்ணீர் வடிக்க நான் ஒன்றும் கண்ணகியல்ல. மானத்தை நினைத்து நிற்க நான் ஒன்றும் இழக்கவில்லை' (*சொல்லாத சேதிகள், 1986: 25*) எனத் தந்தையாதிக்கம் கட்டமைத்துள்ள கற்பு, தூய்மை என்ற கருத்துருவங்கள் மீது கட்டப் பட்டிருந்த புனிதத்தன்மை எனும் போர்வையை அகற்றி, அதனைச் சகஜமாகக் கடந்து செல்வதைக் காணலாம்.

## IX

காலம்காலமாக ஆண்களின் பார்வையில் பெண்கள் முகம், இதயம், ஆத்மா என்ப வற்றைக்கொண்ட உணர்வுள்ள ஜீவனாக கருதப்படவில்லை.

ஆணின் விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப பெண் உடலை கட்டமைத்த ஆண் மேலாண்மைச் சமூகம், பருவத்தே எழுகிற பாலியல் உந்தல்களை ஆணுக்கானதாக மட்டும் குறுக்கிப் பெண் உடலை வெறும் போகப்பொருளாக வடிவமைத்துக்கொண்டதோடு ஆணின் பாலியல் இச்சைக்காக பெண்ணுடலைக் கொண்டாடவும் அவனின் பாலியல் இச்சைகளைக் கட்டுப்படுத்த பெண்ணுடலை அசுத்தமானது, அருவருப்பானது எனப் பழிக்கவும் செய்தன. அதனால் பெண்ணின் உடலைப் போகப்பொருளாக, பாலியல் பிண்டமாகக் காட்டும் ஆணா திக்கக் கருத்துருவங்களை எதிர்க்கும் பெண்கள், பெண்ணின் உடலையும், உணர்வுகளையும் கொண்டாடுகின்றனர். எடுத்துக்காட்டாக, காலம்காலமாக ஆண்களின் பார்வையில் பெண்கள் முகம், இதயம், ஆத்மா என்ப வற்றைக்கொண்ட உணர்வுள்ள ஜீவனாக கருதப்படவில்லை. இரண்டு மார்புகளும் நீண்ட கூந்தலும் சிறிய இடையும் பருத்த தொடையும் கொண்ட ஒரு சதைப்பிண்டமாகவே பார்க்கப்பட்டுவருகின்றனர். சமையல் செய்தல், படுக்கையை விரித்தல், குழந்தை பெறுதல், பணிந்து நடத்தல் ஆகியவையே அவர்களின் கடமைகளாகும். அவர்களுக்கென்று எவ்வித மான விருப்பு வெறுப்புக்கள் இல்லை. கணவன் முதல் கடைக்காரன்வரை எவ்வித வேறுபாடுகளும் இல்லாமல் பெண்களை ஒரு நுகர்வுப் பொரு ளாகவே பார்க்கின்றனர் என்பதை அ. சங்கரி 'அவர்களின் பார்வையில்' (*சொல்லாத சேதிகள், 1986: 01*) என்ற கவிதையில் பதிவுசெய்துள்ளார். இவ்வாறு நுகர்வுப் பண்டமாகக் கருதுவதை எதிர்க்கும் பெண்கள், பெண் உடலினுள்ளும் பிரபஞ்சத்தின் உயிர்ப்பே உறைந்துக்கிடக்கின்றது என்பதையும் பதிவுசெய்ய தவறவில்லை. எடுத்துக்காட்டாக,

*பாலியல் உணர்வு*
*மட்டுமா எம்மில் கலந்துள்ளது?*
*பார்த்தல் கேட்டல்*
*ருசித்தல் மணத்தல்*
*உணர்தல் இவற்றுடன்*

*பகுத்தறிதல் என்பனவும்*
*எமக்குண்டு.*
*கண்களும் மூக்கும்*
*செவிகளும் நாவும்*
*உணர்மிகக் கொண்ட தோல்முடியும்*
*எம்மைக் காவலிட்டுள்ளன.*
*இவற்றினுள்ளே,*
*இப்பிரபஞ்சத்தின் உயிர்ப்பே*
*உறைந்துகிடக்கின்றது* (சுல்பிகா, *1995: 16,17*)

எனப் பெண் ஒரு பாலியல் நுகர்பொருளல்ல அவளுள்ளும் இப் பிரபஞ்சத்தின் உயிர்ப்பே உறைந்துகிடக்கின்றது என்பதைப் பதிவுசெய் துள்ளார், சுல்பிகா. இத்தகைய நிலமையினால் 'பெண் எழுத்துக்களில், பெண்ணின் உடல் அவளுக்கானது என்ற அரசியல் முன்னிறுத்தப் படுகின்றது' (பிரேமா, 2007: 22). அவ் எழுத்துக்களில் பெண் தன் உடலைக் கொண்டாடுதலும், காமத்தைப் பாடுதலும், ஆண் ஒருவனால் உணர்ந்துகொள்ள முடியாத பெண் உடலின் இரகசியங்களைப் பேசுதலும் முதன்மைப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக,

'பெண் எழுத்துக்களில், பெண்ணின் உடல் அவளுக்கானது என்ற அரசியல் முன்னிறுத்தப் படுகின்றது'

*முத்தங்களாகி கலவியில் மயங்கி*
*இறுக அணைத்து வியர்வையில் ஒட்டி*
*கரைந்து போகும் அடுத்த நிமிடமே*
*நீ ஆணாகிவிடுகிறாய்*
*வக்கிரமாகிறது உனது கேள்விகள்*
*நான் வேண்டிய நீ முழுமையாகக் காணாது*
*ஆணாக விஸ்வரூபம் எடுக்கிறாய்*
*ஒரு நாள் மறந்துவிடலாம்*
*இரு நாள் மன்னித்துவிடலாம்*
*ஒவ்வொரு நாளும் …*
*பைத்தியமாகிறது உறவு* (றஞ்சனி, *2005: 21*)

என்ற கவிதை பெண்ணின் பாலின்ப வேட்கையையும் பெண் உடலின் பாலின்ப உச்ச நெகிழ்ச்சிக்கான புறக்கணிப்பையும் முன்னிறுத்து வதைக் காணலாம். ஆணாதிக்கப் பண்பாட்டுச் சூழலால் பேசமுடியாமல் ஒடுக்கப்பட்டிருந்த பெண் உடலின் உள்ளார்ந்துள்ள உணர்வுகளை இக்கவிஞர்கள் மேற்கூறியவாறு பேசியுள்ளதோடு அதன் மற்றுமொரு நீட்சியாக தன்பால் சேர்க்கை பற்றியும் பெண்ணே பெண்ணுடலைக் கொண்டாடுவதைப் பற்றியும் பேசிவருகின்றனர். இதுவரை காலமும் பெண்கள் தமக்கே உரியது, யாரிடமும் பகிரக்கூடாது என அந்தரங்கமாகப் பேணிய அவர்களது பாலின்பக் கிளர்ச்சிகளைப் பகிரங்கமாக்கியுள்ளதோடு பெண்ணின் பாலின்பத்திற்கு ஆண் துணை அவசியம் இல்லை என்பதை யும் அக்கவிதைகள் பதிவுசெய்துள்ளன. இவ் அந்தரங்கக் கவிழ்ப்பும், ஆண் துணை நிராகரிப்பும் ஆண் அதிகாரத்தை ஆட்டிப்பிடுங்கி எறியும் செயற்பாடாகவே கருதப்படுகின்றது.

## X

ஆணின் அதிகார மையமாக இருந்த பெண் உடலை தமக்கானவையாக மீட்டெடுத்த பெண்கள், அவ் உடலை ஒரு கட்டுக்குள் வைத்திருந்த ஆணாதிக்கக் கருத்துநிலைகளைக் கேள்விக்குட்படுத்தி, ஆணின் அதிகாரத்தளங்களாக இருந்த அனைத்தையும் தகர்த்தெறிந்து, தம்மை காலம்காலமாக அடக்கி வைத்திருந்த கட்டுக்களின் 'பூட்டுக்களை உடைத்துப் புறப்பட்டு வந்துள்ளார்கள்' (மறையாத மறுபாதி, *1993: 42*). அச்சிறை உடைப்பு ஆணாதிக்க இருப்பினை ஆட்டங்காண வைத் துள்ளது. ஆதலால் காலம்காலமாக ஆட்டிப்படைத்துவரும் ஆணின் அதிகார இறுமாப்பு சிதைவது நிச்சயம் என்பது பெண்களுக்கு உறுதியாகிவிட்டது. அதனாலேயே, 'அதிகாரங்கள் கைமாறும் அடிமை விலங்குகளும் ஆணாதிக்கமும் உடைத்தெறியப்படும் வேளை வெகுவிரைவிலேயே' (மறையாத மறுபாதி, *1993: 51*) எனப் பெண்கள் முழங்குவதோடு இத்தனைக் காலமும் பெண்கள் மீது நிகழ்த்தப்பட்டு வந்த வன்முறை இனி எப்பெண் மீதும் நிகழ்த்துவதற்கு அனுமதிக்கப் போவதில்லை '...சுதந்திரமாய், சுயமாக பெண்கள் வாழ இப்போதே எமது போராட்டத்தை ஆரம்பிக்கின்றோம். இணைய விரும்புவோர் இணைந்து கொள்ளலாம்' (மறையாத மறுபாதி, *1993: 54*) என இயக்க மாகச் செயற்பட அழைப்புவிடுக்கின்றனர். இவ்வாறு பெண்களின் விடுதலைச் செயற்பாட்டில் பெருகிவரும் விருத்தியால் அடுத்த சந்ததியினர் எல்லாவித கட்டுக்களில் இருந்தும் பூரண விடுதலைப் பெற்று இப்பிரபஞ்ச வெளியில் சுதந்திரமாகச் சுற்றித்திரிவர் என்பது பெண்களின் பூரண நம்பிக்கையாகும். அதனையே ஆழியாள்,

'அதிகாரங்கள் கைமாறும் அடிமை விலங்குகளும் ஆணாதிக்கமும் உடைத் தெறியப்படும் வேளை வெகுவிரை விலேயே'

*அங்கே பார் தோணி!*
*அதற்கு கால்களும் இல்லை*
*கட்டுக்களும் இல்லை*
*அப்படித்தான் அவர்தம் பேத்திகளும்*
*பேத்தி வயிற்று மகள்களும்*
*சவல் கொண்டு சமுத்திரங்களைக் கடப்பர்* (ஆழியாள், 2000: 12)

எனப் பெண்களால் படைக்கப்படும் புதிய உலகில் பெண்களின் வாழ்வு எல்லையற்று விரிவதைப் பதிவுசெய்துள்ளார்.

மேற்கூறியவாறு பெண்ணின் இருப்பில் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் ஆண் அதிகாரச் சமூகத்திற்கும் அதன் ஆதிக்கக் கருத்துருவங் களுக்குமான எதிர்வினையை இலங்கைப் பெண்கவிஞர்கள் பல்வேறு தளங்களிலும் நிகழ்த்திவருவதோடு வெகுவிரைவில் ஆணாதிக்கம் வீழ்த்தப்பட்டு பெண்ணின் சுயாதீனமான இருப்பு உறுதிப்படுத்தப்படும் என உறுதியும் கொண்டுள்ளனர். அவ்எதிர்வினைகள் யாவும் ஆணை அவனின் அதிகாரப் போதையிலிருந்தும் அவனது கலாசார கற்பிதங் களிலிருந்தும் விடுவித்து பெண்ணுள்ளும் இப்பிரபஞ்சத்தின் உயிர்ப்பே

உறைந்து கிடக்கிறது, அவளை அவளாக வாழவிடுங்கள் என்பதை வெளிப்படுத்துவதிலேயே மையங்கொண்டுள்ளன.

இக்கவிதைகள் இலங்கைத் தமிழ்ப் பெண்கள் எதிர்கொண்ட அனுபவங்களினதும், அவர்களது எதிர்பார்ப்புக்களினதும் சாரமாக மட்டும் அமையாமல் உலகளாவிய ரீதியல் ஆணாதிக்க வெளிக்குள் நசுக்கப்படுகின்ற பெண்களின் மனவுணர்வுகளையும், இலங்கை போல ஆயுத போராட்டத்துக்கு உள்ளாகிய நாடுகளில் வாழும் பெண்களின் மனவுளைச்சல்களையும் எதிர்பார்ப்புக்களையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. அவ்வகையில் இக்கவிதைகளை உலகளாவிய ரீதியில் விருத்தி பெற்றுவரும் பெண்ணிய சிந்தனைகளதும் பெண் எழுச்சியினதும் வெளிப்பாடாகக் கொள்ளலாம்.

இக்கவிதைகளை உலகளாவிய ரீதியில் விருத்தி பெற்றுவரும் பெண்ணிய சிந்தனைகளதும் பெண் எழுச்சியினதும் வெளிப்பாடாகக் கொள்ளலாம்.

## உசாத்துணைகள்

### முதன்மை ஆதாரங்கள்


அனார், *(2007)* எனக்கு கவிதை முகம், நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.

…………….. *(2009)* உடல் பச்சை வானம், நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.

ஆழியாள், *(2000)* உரத்துப் பேச, சென்னை: மறு.

…………… *(2013)* கருநாவு, சென்னை: மாற்று.

ஔவை, *(2014)* எதை நினைந்தழுவதும் சாத்தியமில்லை, நாகர்கோவில்: காலச்சுவடு.

ஃபஹீமா ஜஹான், *(2007)* ஒரு கடல் நீரூற்றி…, சென்னை: பனிக்குடம் பதிப்பகம்

சுல்பிகா, *(1995)* விலங்கிடப்பட்ட மானுடம், சென்னை: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்.

சொல்லாத சேதிகள், *(1986)* யாழ்ப்பாணம்: பெண்கள் ஆய்வுவட்டம்.

தான்யா, *(2014)* சாகசக்காரி பற்றியவை, சென்னை, வடலி வெளியீடு.

பானுபாரதி, *(2009)* பிறத்தியாள், சென்னை: கருப்புப் பிரதிகள்.

பிரதீபா, *(2005)* "பிரதீபா, தீ - கவிதைகள்", கனடா: காலம் - அக்டோபர்.

பெண்ணியா, *(2006)* என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை, ஊடறு வெளியீடு.

மங்கை, அ, (தொ.ஆ) *(2007)* பெயல் மணக்கும் பொழுது, சென்னை: மாற்று.

மறையாத மறுபாதி: புகலிடத்துப் பெண்கள் கவிதைத் தொகுப்பு, *(1993)* பிரான்ஸ்: எக்ஸில்.

றஞ்சனி, *(2005)* றஞ்சனி கவிதைகள், சென்னை: இமேஜ் ரூ இம்ப்ரெஷன்.

**துணை ஆதாரங்கள்**

நு.்.மான், எம்.ஏ (க.ஆ), (2010) "்.பஹீமா ஜஹான் கவிதைகள்", எதுவரை – பெப் - மார்ச்.

பஞ்சாங்கம், க, (2006) ஹெலன் சீக்சூ, தஞ்சாவூர்: அகரம்.

பிரேமா, இரா, (2007) பெண் எழுத்துக்களின் அரசியல், சென்னை: அறிவுப்பதிப்பகம்.

ராஜ்கௌதமன், (1997) அறம் / அதிகாரம், கோவை: விடியல் பதிப்பகம்.

ஜமாலன், (2010) நவீன தொன்மங்களும் நாடோடிக் குறிப்புகளும், சென்னை: புலம்.